விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. அறிக்கை அளித்தல்

துணை வினாக்களுக்கு அளித்த விடைக்கு திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் தேதியன்று உடுக்குறியிட்ட வினா எண் 99-க்கு (10346) எழுப்பப்பெற்ற துணை வினாக்களுக்கு அளிக்கபெற்ற விடைகளுக்கு மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் திருத்தம் ஒன்றை அளிப்பார். கேள்வி கேட்டவர்கள் திரு. எம். ஏ. லத்தீப், திரு. ரா. உமாநாத் ஆகியோர்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே 1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் தேதி அன்று உடுக்குறியிட்ட வினா எண் 99-க்கு விடையளிக்கையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எம். ஏ. லத்தீப் மற்றும் ரா. உமா நாத் ஆகியோரது துணை வினாக்களுக்கு அளிக்கப்பட்ட பதில் களுக்கான திருத்தங்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு திரு. எம். ஏ. லத்தீப் கேள்விக்கு அளிக்கப்பட்ட பதில் :

' 4-வது வாரியம் ஏற்பட்ட பிறகு 3-வது வாரியத்தின்மீது புகார்கள் கொடுத்தார்கள். அதன்மீது புலன் விசாரணை செய் திருக்கிறார்கள். '

திருத்தம்.

'4-வது வாரியம் ஏற்படுவதற்கு முன்னாலே 3-வது வாரி யத்தின் மீது புகார்கள் கொடுத்தார்கள். அதன்மீது விசாரணை செய்திருக்கிறார்கள். '

மாண்புமிகு திரு. ரா. உமாநாத் கேள்விக்கு அளிக்கப்பட்ட பதில் : ' ....இதன் மீது கொடுக்கப்பட்ட ரிப் போர்டிலிருந்து 44 வழக்குகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. திரும்ப வும் இதிலுள்ள உறுப்பினர்கள் எங்களுக்கு வாய்ப்பு கொடுக்க வில்லை என்று சொன்னதற்குப் பிறகு இப்போது அரசின் சார்

3-11-79 அன்றைய 306-307ம் பக்கங்களில் பார்க்க.

பில் விழிப்புணர்ச்சி—லஞ்ச ஒழிப்புத் துறையின் மூலமாக ஒவ்வொரு உறுப்பினரின் கருத்துக்களையும் கேட்டு புலன் விசாரணை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் மறுபரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பிறகு அரசு இதன் மீது நடவடிக்கை எடுக்கும்.'

திருத்தங்கள்.

'42 குற்றச்சாட்டுகள் மற்றும் 33 புதிய வழக்குகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விசாரணை நடத்தி அதன்மீது வந்த அறிக்கையின் பேரில் அரசு, தமிழ்நாடு வக்பு வாரியத்தையும், சம்பந்தப்பட்ட இலாக்காக்களையும் கலந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேற்படி விசாரணைக்குட்பட்ட முன்னாள் வக்பு குழு உறுப்பினர்களிடமிருந்து, தங்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்று எந்த வேண்டுகோளும் அரசுக்கு வரவில்லை. புகார்களின் உண்மைத்தன்மையைக் கண்டறியவே மேற்படி விசாரணை நடத்தப்பட்டதால் இவ்விசாரணையின்போது அந்த உறுப்பினர்களுக்கு வாய்ப்பளிக்கின்ற கேள்வி எழவில்லை.'

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் திருத்தம் கொடுத்த பிறகும் நான் கேட்க விரும்புவது, அதிலிருக்கக்கூடிய ஒன்றிரண்டு அங்கத்தினர்கள் எனக்குத் தெரிந்தவர்கள். யார் தவறு செய்தாலும் நிருபிக்கப்பட்டால் கட்டாயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், முடிவெடுப்பதற்கு முன்னதாக சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்பது 'பிரின்சிப்பில்ஸ் ஆஃப் நாச்சுரல் ஜஸ்டிஸ்'. அது வழங்கப்பட வில்லையென்று கூறுகிறபொழுது அந்த நியாயம், அந்த 'பிரின்சிப்பில்ஸ் ஆஃப் நாச்சுரல் ஜஸ்டிஸ்'ஸின்கீழ் அவர்கள் 'பொசிஷனை'' எக்ஸ்ப்ளெய்ன் பண்ணுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் எப்படி வக்ஃப் உறுப்பினர்கள் தெரிவித்தார்களோ, அதே போல், என்னிடத்திலே தெரிவித்ததையொட்டித்தான் அந்தப் பதிலை நான் சொன்னேன். ஆனால், அதிகாரப்பூர்வமாக நான் கோப்புகளைப் பார்த்த பொழுது, அப்படிக் கொடுக்கவில்லை என்று தெரிகிறது. அதனால் அந்தக் கேள்வி எழவில்லை என்று திருத்தத்தில் தெரிவித்தேன். அப்படி யாராவது கேட்டால், அதிகாரப் பூர்வமாக எழுதிக் கொடுத்தால் கண்டிப்பாக வாய்ப்புக் கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்பது ஒன்று. அப்படிக் கொடுக்கக் கூடிய நிலை உருவாகும்போது, உங்கள் மீது இன்னின்ன குற்றச்,

சாட்டுகள் இருக்கின்றன. என்று முறையாக சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்குத் தெரிவித்த பிறகு, அவர்களுடைய விளக்கங்களைத் தர வாய்ப்பு தரவேண்டும் என்று கேட்க முடியும் அப்படி ஏதாவது சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறதா ? அப்படி என்றால் யார் யார் அந்த உறுப்பினர்கள், அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் என்னென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர். இது லஞ்ச ஒழிப்புத் துறையின் பரிசீலனையில் — அவர்கள் ஆய்வில் இருக்கிறது. எனவே அவர்கள் எப்படி இந்த வழக்கை நடத்த வேண்டும் என்று அரசாங்கத்திற்கு அறிக்கை தருகிறார்களோ அதன்படிதான் நடவடிக்கை எடுக்க முடியும். ஒருவேளை உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளித்திருக்கக்கூடும். அவர்கள் கேட்காவிட்டாலும் கூட உங்கள் மீது இன்னின்ன குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது என்று சொல்லி, இலாகாபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அப்படிப்பட்ட வாய்ப்பு அவர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை என்றால், அரசுக்கு மனுப் போட்டால் நிச்சயமாக அந்த வாய்ப்பு வழங்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களுக்குப் பதிலாகத் தெரிவித்திருக்கிறேன்.

3. தகவல் கோரல்.

கிராமப்புறங்களில் டீசல், மின்சாரப் பற்றாக்குறை குறித்து.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் டீசல் கிடையாது, மின்சாரம் கிடையாது. இது குறித்து இந்த அவையிலே ஏகமாகக் கூறப்பட்டிருக்கிறது. இது பற்றி விவசாயிகள் அரசாங்கத்திற்குத் தந்தி, மனுக்கள் மூலமாக அனுப்பியிருக்கிறார்கள். அதைக் குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் கிடையாது. போதிய டீசல் கிடைக்கவில்லை, மின்சாரத்திற்கும் கட்டுப்பாடு இருக்கிறது. பயிர்கள் காய்கின்றன. விவசாயிகள் என்ன செய்வது என்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டு இருக்கிறார்கள். அரசு போதிய நடவடிக்கை எடுத்து போதிய டீசல் கொடுக்காதன்தயும் மின்சாரம் கொடுக்காததையும் கண்டித்து முற்போக்குக் கூட்டணியின் சார்பில் நாங்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறோம், அடையாள பூர்வமாக.

(காங்கிரஸ், தி.மு.க. அகிலஇந்திய பார்வாடு பிளாக், முஸ்லீம் லீக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்)